www.Padasalai.Net www.TrbTnpsc.com

மதுரை மாவட்டம் தேதி : 18.12.23

HMD

# அரையாண்டுத் தேர்வு – 2023

**12 - ஆம் வகுப்பு**

## வணிகவியல்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பிரிவு – I (20x1=20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்
அ) ஃபேயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது
ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது
ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

3. நிதிச் சந்தை வணிக நிறுவனங்களுக்கு--------- உதவுகிறது
அ) நிதிகளை திரட்டுவதற்கு ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு
இ) விற்பனையை அதிகரிப்பதற்கு ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு

4. மூலதன சந்தை ------ஐ வழங்குவதில்லை அ) குறுகிய கால நிதி
ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்ட கால நிதி

5. நம்பிக்கையுள்ள ஊகவணிகர்கள் என்பவர் அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

6. செபியின் தலைமையகம் ________ ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

7. பயிற்சி பெறுபவர் மேற்பார்வையாளர் அல்லது பணியில் உள்ள மேலதிகாரி மூலம் பயிற்சியை பெறும் முறை ____ என்று அழைக்கப்படுகிறது
அ) தொழிற்ச்சாலைக்குள் பயிற்சி முறை ஆ) புதுப்பிக்கும் பயிற்சி முறை
இ) பங்கேற்று நடிக்கும் முறை ஈ) தொழிற் பயிற்சி முறை

8. சமூக சந்தைப்படுத்துதல் என்பது ________ யுடன் தொடர்புடையது
அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூக மாற்றம் ஈ) சமூக தீமை

9. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ)15.04.1987 ஈ)15.04.1990

10. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
அ) இருதரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்

11. மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881 பிரிவு 6 எதைப் பற்றி இயம்புகிறது?
அ) கடனுறுதிச் சீட்டு ஆ) காசோலை
இ) மாற்றுச் சீட்டு ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

12. பின்வருவனவற்றில் கண்ணுக்கு புலனாகாத சொத்து எது?
அ) மனித வளம் ஆ) இயந்திரம் இ) நிலம் ஈ) வாகனங்கள்

13. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை?
அ) துணிகர உணர்வு ஆ) நெளிவு சுளிவு இ) தன்னம்பிக்கை ஈ) அனைத்தும்

14. _____________ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
அ) டிஜிட்டல் இந்தியா ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
இ) ஸ்டார்ட்டப் இந்தியா ஈ) வடிவமைப்பு இந்தியா

15. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்கும் செயல்முறை ____ அழைக்கப்படுகிறது
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

16. ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது ___ இயக்குனர்கள் இருக்க வேண்டும்
அ) ஏழு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) இரண்டு

17. நிறுமம் பதிவு செய்யப்பட் நாளிலிருந்து _____ மாதத்திற்குள் முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும். a) 12 b) 15 c)18 d) 21

18. பொருத்துக:
1) மறைமுக வளங்கள் - i) புறத்திறனீட்டல்
2) திறன் சோதனை - ii) நுண்ணறிவுச் சோதனை
3) ஆளுமைச் சோதனை - iii) ஆர்வச் சோதனை
4) நேரடி வளங்கள் - iv) வளாக தேர்வு

| | 1 | 2 | 3 | 4 | | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | i | ii | iii | iv | ஆ) | ii | iii | iv | i |
| இ) | iv | iii | i | ii | ஈ) | iii | i | ii | iv |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

19. கூற்று (A): தனியார்மயமாக்கல் கொள்கையின் கீழ் பல பொதுத்துறை அலகுகள் (PSU) தனியாருக்கு விற்கப்பட்டன.
காரணம் (R) : தவறான நிர்வாகம் மற்றும் அரசியல் தலையீடு காரணமாக பொதுத்துறை நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கியதே தனியார்மயமாக்கலுக்கு முக்கிய காரணம்.
அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

20. பொருந்தாத ஒன்றை கண்டறிக அ) மனப்புரட்சி ஆ) வேலைப் பகிர்வு
இ) கட்டளையொருமை ஈ) ஒரு முனை இயக்கம்

## பிரிவு – II (7x2=14)

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண். 30 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக
22. புறத்தோற்றமற்ற பத்திர கணக்கு என்றால் என்ன?
23. ஊக வணிகர்களின் வகைகள் யாவை?
24. ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
25. சமூக சந்தையிடுகை என்றால் என்ன?
26. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
27. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று நன்மையை எழுதுக.
28. தெளிவான தொழில் முனைவோருக்கு உதாரணம் தருக.
29. முழுநேர இயக்குனர் என்பவர் யார்?
30. சந்தை என்ற சொல் மார்கட்ட்ஸ் என்ற ________ சொல்லிருந்து பெறப்பட்டது

## பிரிவு – III (7x3=21)

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண். 40 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக. (ஏதேனும் மூன்று)
32. இரண்டாம் நிலைச்சந்தை – சிறு குறிப்பு வரைக.
33. கருவூல இரசீதின் ஏதேனும் மூன்று வகைகளை விவரி.
34. காளை மற்றும் கரடி - விளக்குக.
35. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?
36. தனியிடச்சந்தை பற்றி எழுதுக.
37. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
38. தொழில்நுட்ப சூழல் பற்றி நீவிர் அறிவது யாது?
39. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
40. மாநிலத் தலைநகரம், மாவட்டத் தலைமையகம், நகரங்கள் மற்றும் நகராட்சிகள் போன்ற நகர்ப்புறங்களில் தனது தொழில் முனைவோர் செயல்பாட்டைத் தொடங்கும் தொழில்முனைவோரின் பெயர் என்ன?

## பிரிவு – IV (5x7=35)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

41. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) *(அல்லது)*
பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் இடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்து தருக.
42. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க. (ஏதேனும் ஐந்து)
*(அல்லது)* பல்வேறு வகையான நிதிச் சந்தைகளை விவரிக்க. (ஏதேனும் ஐந்து)
43. செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் ஐந்து) *(அல்லது)*
பயிற்சியின் பல்வேறு முறைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)
44. காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக. (ஏதேனும் ஐந்து) *(அல்லது)*
சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக
45. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (ஏதேனும் ஐந்து) *(அல்லது)*
வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
46. பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தையை வேறுபடுத்துங்கள். (ஏதேனும் ஐந்து) *(அல்லது)*
பல்வேறு வகையான நிறுமக் கூட்டங்களை விளக்குக.
47. இயக்குனரின் தகுதிகள் பற்றி எழுதுக *(அல்லது)*
நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து)



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**+2 வணிகவியல் அரையாண்டுத் தேர்வு டிசம் - 23**
**சரியான விடை**

1. (ஆ) டேலர்
2. (ஈ) அமைப்பின் குறிக்கோள்களைவரையறுப்பது
3. (அ) நிதிகளை திரட்டுவதற்கு
4. (அ) குறுகிய கால நிதி
5. (இ) காளை
6. (ஆ) மும்பை
7. (ஈ) தொழிற் பயிற்சி முறை
8. (ஆ) சமூக வகுப்பு
9. (இ) 15.04.1987
10. (ஈ) அனைத்தும்
11. (ஆ) காசோலை
12. (அ) மனித வளம்
13. (ஈ) அனைத்தும்
14. (ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
15. (அ) தேர்வு
16. (இ) மூன்று
17. (இ) 18
18. (அ) i ii iii iv
19. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்
20. (அ) மனப்புரட்சி

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மைக் கருவிகளை பட்டியலிடுக?**
கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

**22. புறத் தோற்றமற்ற பத்திர கணக்கு:** நிறுமம் பதிவாளரால் காகித வடிவிலான பங்குச்சான்றிதழை அழித்து புறத்தோற்றமில்லா பத்திரங்களாக மாற்றி அவை முதலீட்டாளர் கணக்கில் பராமரிக்கப்படுவதே புறத்தோற்றமற்ற பத்திரக்கணக்கு எனப்படும்.

**23. ஊக வணிகர்களின் வகைகள்:** காளை, கரடி. கலைமான், முடவாத்து

**24. ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல்** போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதிசாராத சலுகைகளை கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துவது வேட்டையாடுதல் ஆகும்.

**25. சமூகச் சந்தையிடுகை:** சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில் சமூகத்தில் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில் பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை சமூக சந்தைப்படுத்தல் எனப்படும்.

**26. ஒழுங்குமுறை சந்தை:** அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படும் சந்தை அரசால் கட்டுப்படுத்தப்படும் சந்தை ஒழுங்குமுறை சந்தை ஆகும்.

**27. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று நன்மைகள்** வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல். சந்தை விரிவாக்கம். தொழில்நுட்ப வளர்ச்சி

**28. தெளிவான தொழில் முனைவோருக்கு உதாரணம் தருக.** அம்பானி, சேஷாத்திரி, ஜாம்செட் டாடா, பிர்லா, TV சுந்தரம் ஐயங்கார், நாராயண மூர்த்தி

**29. முழு நேர இயக்குனர்:** நிறுமத்தின் இயக்குனராக பணிபுரியும் ஒருவர் தனது வேலை நேரம் முழுவதையும் நிறுமத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவதும் மேலும் இதன் மூலமாக நிறுமத்திற்கு வருமானம் ஏற்படும் வகையில் குறிப்பிடத்தக்க நேரடி ஆர்வத்தைக் காட்டுபவரும் முழுநேர இயக்குனர் ஆவார்.

**30.** சந்தை என்ற சொல் மார்கட்டஸ் என்ற **லத்தீன்** சொல்லிலிருந்து பெறப்பட்டது

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகள்:**
சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்துதல்.
நோக்கத்தை மாற்ற அதிகாரத்துடன் இருப்பவர்களுடன் ஆலோசனை செய்கிறது,
நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

**32. இரண்டாம் நிலைச் சந்தை:** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

**33. கருவூல இரசீதின் வகைகளை விவரி**

- 91 நாட்கள் கருவூல ரசீதுகள் 4 சதவீத தள்ளுபடியில் வெளியிடுதல்,
- 182 நாட்கள் கருவூல ரசீதுகள் - ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடுதல்,
- 364 நாட்கள் கருவூல இரசீதுகள் - நிலையான தள்ளுபடி இல்லை.

**34. காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.

**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**35. மன அழுத்த நேர்காணல்:** விண்ணப்பதாரரிடம் வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையில் கேள்விகள் கேட்கப்படும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க இத்தகைய நேர்காணல் நடத்தப்படுகிறது.

**36. தனியிடச்சந்தை:** உண்மையில் இது ஒரு சந்தையே அல்ல. குறிப்பிட்ட ஒரு பிரிவு வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து முயற்சிகளின் செயல்பாடாகும். எ.கா: விளையாட்டுச் சேனல்கள் அதற்காக மட்டும் ஏற்படுத்தப்படுகிறது.

**37. செயற்கைப் பற்றாக்குறை என்றால்:** வணிகர்கள் தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர் பலகையை வைப்பது செயற்கைப் பற்றாக்குறை ஆகும்.

**38. தொழில் நுட்ப சூழலை:** கடந்த காலங்களில் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சி அனைத்து வியாபாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பின் வளர்ச்சி உலகளவில் சந்தைகளில் உருவாக்கியுள்ளது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நுகர்வோரின் தேவையைக் கண்டறிய முடிகிறது.

**39. சட்டமுறைக் கூட்டம்:** ஒரு பொது நிறுமம் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் கூட்டப்படும் பங்குதாரர்களின் **முதல் கூட்டம்** ஆகும்.

**40.** மாநிலத் தலைநகரம், மாவட்டத் தலைமையகம், நகரங்கள் மற்றும் நகராட்சிகள் போன்ற நகர்புறங்களில் தனது தொழில் முனைவோர் செயல்பாட்டைத் தொடங்கும் தொழில் முனைவோரின் பெயர் **நகர்புறத் தொழில் முனைவோர்.**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகள்:**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

| **41. ஆ. பங்குகள்** | **கடன் பத்திரங்கள்** |
|---|---|
| பங்கு முதலில் ஒரு பங்கு | இது ஒரு கடன் ஆவணம் |
| பங்குகளை வைத்திருப்பவர் உரிமையாளர் | கடன்பத்திரங்களைவைத்திருப்பவர் கடனீந்தோர் |
| பங்காதாய வீதம் மாறக்கூடியது | வட்டிவீதம் நிலையானது |
| வாக்களிக்கும் உரிமை உண்டு | வாக்களிக்கும் உரிமை இல்லை |
| சில நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடியில் வெளியிட முடியும் | கடன்பத்திரங்களை தள்ளுபடியில் வெளியிடலாம் |

**42.அ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**42.ஆ) பல்வேறு வகையான நிதிச்சந்தைகள்:**

நிதிச்சந்தைகள் நிதிகோருதல் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

**வகை:- கடன் சந்தை :-** கடன் கருவிகளை வணிகம் செய்வது (எகா) அரசு பத்திரங்கள்

**சமநிலை பங்குச் சந்தை:-** பங்குளை வணிகம் செய்வது (எகா) நிறும பங்குகள்

**முதிர்வு:- பணச்சந்தை:-** குறுகிய காலத்தில் முதிர்வு அடைவது (ஒரு ஆண்டுக்குள்) (எகா) கருவூலச்சீட்டு

**மூலதனச் சந்தை:-** நீண்ட காலத்தில் அடைவது (ஓராண்டுக்கு மேல்) (எகா) பங்குகள்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**வெளியீட்டுக்காலம்:- முதல்நிலைச் சந்தை :-** புதிய வெளியீடுகளுக்கான சந்தை

**இரண்டாம் நிலைச் சந்தை:-** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை

**வழங்கல்:- உடனடிச் சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் உடனடியாக பெறுதல்.

**எதிர்கால சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.

**அமைப்பு:- பரிமாற்றக வர்த்தகச் சந்தை:-** ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட அமைப்பு (பங்கு மாற்றகம்)

**உடனடி சந்தை:-** வழக்கமான நடைமுறைகளை கொண்டது.

**43.அ) செபியின் பணிகளை விவரி**

போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்கிறது.

பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.

நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல்.

மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

**43.ஆ) பயிற்சியின் பல்வேறு முறைகளை விவரி**

**வழிகாட்டும் பயிற்சி முறை:-** ஒரு பணியாளர் தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பகிரிந்து கொள்ளும் செயல் முறை ஆகும்.

**பணி சுழற்சி முறை:-** பணியாளரை ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கோ அல்லது ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கோ மாற்றப்படுவதாகும்.

**மின்னணு கற்றல் முறை:** வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் ˙தொழில் நுட்ப செயல்முறையை பயன்படுத்துவது.

**குழு கலந்துரையாடல் முறை:-** ஒரு தலைப்பை விவாதிக்க இந்த முறையின் கீழ் பங்கேற்பாளர்கள் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்படுகிறார்கள்.

**சூழ்நிலை ஆய்வு முறை:-** ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தீர்வினைக் கண்டுபிடிக்க பயன்படுவதாகும்.

**44.அ) காசோலையின் இயல்புகள்:**

**எழுத்து வடிவில் இருத்தல்:-** காசோலை எழுத்து வடிவில் வரையப்பட்டிருக்க வேண்டும். வங்கியர் காசோலையை அச்சிட்டு தருகிறார்கள்.

**குறிப்பிட்டவங்கியர்மீது வரைதல்:-** காசோலையை ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது மட்டுமே எழுத முடியும்.

**நிச்சயமான ஒரு தொகை:-** வங்கியரை ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கும்படி ஆணையிட வேண்டும்.

**கேட்டவுடன் தருமாறு எழுதப்படுவது:-** காசோலையை கேட்டவுடன் தருமாறு எழுதப்பட வேண்டும்.

**எழுதுபவர் கையொப்பம்:-** எழுதுபவர் கையொப்பம் இட வேண்டும். வரைபவரின் கையெழுத்து வங்கியரால் ஒவ்வொரு முறையும் ஒப்பிட்டு பார்க்கப்படும்.

**44.ஆ) சந்தையிடுகை கலவையின் கூறுகள்**

**பொருள்:-** பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு. பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.

**விலை:-** பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பு விலையாகும்.

**இடம்:-** சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம் முக்கியமாகும்.

**விற்பனை மேம்பாடு:-** விற்பனை மேம்பாடு நடவடிக்கையில் விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது.

**45.அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?**

**அதிகவிலைக்கு விற்றல்:-**பொருளின் விலையைவிட கூடுதலானவிலையில் விற்று நுகர்வோரை ஏமாற்றுகின்றனர்.

**கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**போலியான பொருட்கள்:-** மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள பொருட்களை போலியாக செய்து விற்று நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர்.

**செயற்கை பற்றாக்குறை:-** வியாபாரிகள் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு இருப்பு இல்லை என செயற்கைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

**தரக்குறைவு:-** கட்டுமானம் செய்து விற்கப்படும் பொருட்களைத் திறந்து பார்த்தால் பல சமயங்களில் தரம் குறைந்த பொருட்களே இருக்கும்.

**45.ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக.**

**நிதி அளிப்பவர்:-** வணிகம் சிறந்த முறையில் இயங்க முக்கிய பங்கு வகிப்பவர்கள் கடனீட்டு பத்திரதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகும்.

**சரக்கு விற்பனையாளர்கள்:-** சரக்கு விற்பனையாளர்களின் முக்கியத்துவத்தை நிறுவனங்கள் உணர்ந்து அவர்களுடன் நல்ல உறவை வளர்க்க வேண்டும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**சந்தையிடுகைஇடைநிலையர்கள்:-**இவர்கள் நிறுவனத்தையும்,நுகர்வோரையும்இணைக்கும்பாலமாக திகழ்கின்றனர்.

**வாடிக்கையாளர்கள்:-** வாடிக்கையாளரே வணிகத்தின் மன்னராக கருதப்படுகிறார். வியாபாரத்தின் நோக்கம் அதன் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றுவதாகும்..

**போட்டியாளர்கள்:-** அனைத்து நிறுவனங்களும் எல்லா நிலைகளிலும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

| 46. அ. தன்மைகள் | பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்சமதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

**46.ஆ) பலவகையான நிறுமக் கூட்டங்கள்:**

**சட்டமுறைக் கூட்டம்:-** பொது நிறுமம் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதத்திலிருந்து 6 மாதத்திற்குள் பங்குனர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும். இதனை சட்டமுறைக் கூட்டம் என்கிறோம்.

**ஆண்டுப் பொதுக் கூட்டம்:-** ஒவ்வொரு ஆண்டும் நிறுமத்தில் இயல்பான நடவடிக்கை குறித்து ஆலோசிக்க கூட்டப்படும் கூட்டம்.

**சிறப்புக் கூட்டம்:-** சில அவசர வியாபார முடிவுகளை எடுக்க இரு ஆண்டு பொதுக் கூட்டங்களுக்கு இடையே கூட்டப்படும் கூட்டம்.

**இயக்குநர் அவைக் கூட்டம்:-** நிறுமத்தின் நடவடிக்கைகள் குறித்து இயல்பான முடிவுகளை எடுப்பதற்காக இயக்குனர்களால் கூட்டப்படும் கூட்டம்.

**வாரியக் குழுக் கூட்டம்:-** ஒவ்வொரு பொது நிறுமமும் தணிக்கைகுழு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். ஆண்டுக்கு குறைந்தது நான்கு முறை கூட்ட வேண்டும்.

**47.அ) இயக்குனர் தகுதிகள் பற்றி கூறுக?**

நிறுமத்திற்கு பொருத்தமான திறன், அனுபவம் மற்றும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

சரியான மனநிலை உடையவராக இருக்க வேண்டும்.

நிறுமத்தின் தகுதி பங்குகள் வைத்திருக்க வேண்டும்.

ஒரு இயக்குனர் தனிநபராக இருத்தல் வேண்டும்.

நல்ல நிதிநிலை உடையவராக இருத்தல் வேண்டும்.

நீதிமன்றத்தால் குற்றவாளி என தண்டிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

**47.ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?**

விற்பனை ஒப்பந்தப்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

விலை செலுத்தியவுடன் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்வது நுகர்வோரின் பொறுப்பாகும்.

குறித்த நேரத்தில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கே அவரே பொறுப்பாகும்.

நுகர்வோர் வாங்கியப் பொருட்களை அதன் விதிமுறை செயல்முறைக்கேற்ப முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது விற்பனையாளரிடமிருந்து ரொக்க இரசீது பெற வேண்டும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com